## முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில்

# தமிழ்நாட்டில் எண்ணற்ற தொழிற்சாலைகள் திறப்பு! இலட்சக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு!

## 2030ல் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதார மாநிலம் நிச்சயம்!

சென்னை, மார்ச் 8–

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியில் 5 ஆண்டுகளில் புதிதாக 30 சிப்காட் தொழில் வளாகங்கள்! 816 புதிய தொழிற்சாலைகளுக்கு 7558 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு! தூத்துக்குடி வின்பாஃஸ்ட் மின்வாகனத் தொழிற்சாலை! இராணிப்பேட்டையில் ஜாகுவார் லேண்டு ரோவர் கார் ஆலை! ஜெயங்கொண்டத்தில் காலணி தொழிற்சாலை! கிருஷ்ணகிரியில் டெல்டா எலக்ட்ரானிக்ஸ் தொழிற்சாலை! பிள்ளைப்பாக்கம் கண்ணாடிப் பொருள்கள் தொழிற்சாலை! மீண்டும் உற்பத்தியைத் தொடங்கிய போர்டு கார் தொழிற்சாலை! எனப் பல மேலும் தொழிற்சாலைகள் திறக்கப்பட்டுள்ளன! தொடர்ந்து மேலும் பல தொழிற்சாலைகள் திறக்கப்படுகின்றன! தமிழ்நாடு 2030 இல் 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதார மாநிலமாக உயரும் என்பது திண்ணம்! திண்ணம்!**

இது குறித்து வெளியான அரசின் செய்திக் குறிப்பு வருமாறு:-

தமிழ்நாட்டின் தொழில் வரலாற்றில் ஒரே இடத்தில் பல தொழில்கள் தோன்றுவதற்கு வகை செய்யும் சிப்காட் நிறுவனத்தை 1971 இல் உருவாக்கி 1973இல் இராணிப்பேட்டையில் முதல் சிப்காட் தொழில் வளாகத்தை தொடங்கி தொடர்ந்து பல சிப்காட் வளாகங்களை உருவாக்கியர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

அதன்பின்னர், ஏறத்தாழ 50 ஆண்டுகளில் 2021 வரை 54 சிப்காட் தொழில் வளாகங்கள் தமிழ்நாடு முழுவதிலும் பல்வேறு பகுதிகளிலும் ஏற்படுத்தப்பட்டன. இந்த சிப்காட் தொழில் வளாகங்கள் வாயிலாக புதிய புதிய தொழிற்சாலைகள் தோன்றி இலட்சக்கணக்கான இளைஞர்கள் வேலைவாய்ப்புகளைப் பெற்றனர். தமிழ்நாடு தொழில் வளர்ச்சியில் இந்தியாவின் ஒரு முன்னணி மாநிலமாக வளர்ந்தது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 2021 இல் ஆட்சிப் பொறுப்பேற்றபின் தமிழ்நாட்டை 2030 க்குள் 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதார மாநிலமாக உயர்த்திட இலக்கை நிர்ணயித்தார்கள்.

முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டின் தொழில்வளத்தைப் பெருக்கிட வேண்டும் என்பதில் குன்றா ஆர்வம் கொண்டு தமிழ்நாட்டில் சென்னை, கோவை, மதுரை, தூத்துக்குடி, கிருஷ்ணகிரி ஆகிய இடங்களிலும், மலேசியா, சிங்கப்பூர், ஜப்பான், அரபு நாடுகள், அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் முதலிய வெளிநாடுகளிலும் அரசு முறைப் பயணங்கள் மேற்கொண்டு முதலீட்டாளர்கள் மாநாடுகளை நடத்தி தமிழ்நாட்டில் உள்ள தொழில் வாய்ப்புகளையும், தமிழ்நாடு அரசு வழங்கும் சலுகைகளையும் எடுத்துக்கூறி தமிழ்நாட்டிற்கு வந்து தொழில் தொடங்குமாறு வேண்டுகோள் விடுத்தார்கள்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 4.8.2025 அன்று தூத்துக்குடி மாவட்டம், சிப்காட் சிலாநத்தம் தொழிற்பூங்காவில் வின்ஃபாஸ்ட் நிறுவனத்தின் மின் வாகன உற்பத்தி ஆலையை தொடங்கி வைத்தார். 2024ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் 16,000 கோடி ரூபாய் உறுதி செய்யப்பட்ட முதலீடு மற்றும் 3500 நபர்களுக்கு உறுதி செய்யப்பட்ட வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு, பதினெட்டு மாதங்களுக்குள் முதற்கட்டமாக, 1300 கோடி ரூபாய் முதலீட்டில் நிறுவப்பட்டுள்ள வின்ஃபாஸ்ட் நிறுவனத்தின் மின்வாகன உற்பத்தி ஆலையை தொடங்கி வைத்தது குறிப்பிடத்தக்கது.

முதலமைச்சர் அவர்களின் இந்த வேண்டுகோளை ஏற்று தமிழ்நாட்டில் தொழில் தொடங்கிட பல முதலீட்டாளர்கள் முன்வந்தனர். அந்த முதலீட்டாளர்களுக்கு நிலம் வழங்கிட ஐந்தாண்டுகளில் 30 புதிய தொழில் பூங்காக்களைத் தொடங்கினார்கள். அவை;

**2021 ஆம் முதல் ஆட்சியாண்டில்**

1. காஞ்சிபுரம் மாவட்டம் ஒரகடத்தில் மருத்துவக் கருவிகளை உற்பத்தி செய்திடும் சிப்காட் தொழில் பூங்கா
2. தேனி மாவட்டம் தேனியில் உணவுப் பூங்கா

**2022 ஆம் இரண்டாம் ஆட்சியாண்டில்**

3. கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரியில் எந்திரவியல் தொழில் பூங்கா.
4. திருவள்ளூர் மாவட்டம் மணலூரில் EMC சிப்காட் தொழிற்பூங்கா.
5. தூத்துக்குடி மாவட்டத்தில் அறைகலன்கள் பூங்கா.
6. பெரம்பலூர் மாவட்டம் எறையூரில் சிப்காட் தொழிற்பூங்கா.

**2023 திராவிட நாயகரின் மூன்றாம் ஆட்சி ஆண்டில்**

7. கிருஷ்ணகிரி மாவட்டம் சூளகிரியில் சிப்காட் வாகனத் தொழிற்பூங்கா
8. காஞ்சிபுரம் மாவட்டம் திருமுடிவாக்கத்தில் சிப்காட் தொழில் பூங்கா;
9. நெமிலியில் சிப்காட் தொழில் பூங்கா.
10. கோவை மாவட்டம் கூளநாயக்கன்பட்டியில் சிப்காட் தொழில் பூங்கா
11. வேலூர் மாவட்டம் தாரப்படவேடு கிராமத்தில் சிப்காட் தொழில் பூங்கா
12. தூத்துக்குடி மாவட்டம் வைப்பாறு சிப்காட் தொழில் பூங்கா.

**2024 திராவிட நாயகரின் 4 ஆம் ஆட்சி ஆண்டில்**

13. தூத்துக்குடி மாவட்டம் சில்ல நத்தம் சிப்காட் தொழில் பூங்கா.
14. கள்ளக்குறிச்சி மாவட்டம் ஏ.சாத்தனூர் SEZ சிப்காட் தொழில் பூங்கா.
15. பெரம்பலூர் மாவட்டம் பாடாலூர் சிப்காட் தொழில் பூங்கா.
16. திருவள்ளூர் மாவட்டம் புதுவாயல் கிராமத்தில் சிப்காட் பூங்கா
17. இராணிப்பேட்டை மாவட்டம் பனப்பாக்கத்தில் சிப்காட் பூங்கா.
18. அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டத்தில் காலணி பூங்கா.
19. கோவை மாவட்டம் வாரப்பட்டியில் சிப்காட் பூங்கா.
20. தருமபுரி மாவட்டம் அதகப்பாடி சிப்காட் பூங்கா.
21. விருதுநகர் மாவட்டம் இ.குமாரலிங்கபுரத்தில் சிப்காட் பூங்கா.
22. திருச்சி மாவட்டம் இலந்தைப்பட்டியில் சிப்காட் பூங்கா.
23. சிவகங்கை மாவட்டம் இலுப்பைக்குடியில் சிப்காட் பூங்கா.

**2025 திராவிட நாயகரின் 5 ஆம் ஆட்சி ஆண்டில்**

24. சேலம் மாவட்டத்தில் சேலம் ஜவுளி பூங்கா.
25. தூத்துக்குடி மாவட்டத்தில் அல்லிக்குளம் சிப்காட் பூங்கா.
26. திருநெல்வேலி மாவட்டம் கங்கைகொண்டானில் சிப்காட் பூங்கா;
27. சிவகங்கை மாவட்டம் கழனிவாசலில் சிப்காட் பூங்கா.
28. மதுரை மாவட்டம் வஞ்சி நகரத்தில் சிப்காட் பூங்கா.
29. திருப்பூர் மாவட்டம் கொளத்துப்பாளையத்தில் சிப்காட் பூங்கா.
30. இராமநாதபுரம் மாவட்டம் மாரியூர் கிராமத்தில் சிப்காட் பூங்கா

– என திராவிட மாடல் ஆட்சியில் 5 ஆண்டுகளில் மொத்தம் 30 சிப்காட் தொழில் பூங்காக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**2021 க்குப்பின் ஏற்படுத்தப்பட்ட சிப்காட் தொழில் வளாகங்களில் உருவாக்கப்பட்டுள்ள தொழிற்சாலைகள்– முதலீடுகள்– வேலைவாய்ப்புகள்**

1973 முதல் செயல்பட்டு வரும் சிப்காட் தொழில் பூங்காக்களில் நடைபெறும் தொழில்களை விரிவுபடுத்திடவும், புதிய தொழில் பூங்காக்களில் புத்தம் புதிய தொழிற்சாலைகள் பலவற்றை உருவாக்கிடவும் இதுவரை 5 ஆண்டுகளில் 816 புதிய தொழில் நிறுவனங்களுக்கு அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த 816 தொழில் நிறுவனங்களுக்கும் மொத்தம் 7588.798 ஏக்கர் நிலங்களை சிப்காட் நிறுவனம் ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த 816 தொழிற்சாலைகளில் தூத்துக்குடி வின்பாஃஸ்ட் மின்வாகனத் தொழிற்சாலை, இராணிப்பேட்டையில் ஜாகுவார் லேண்டு ரோவர் கார் தொழிற்சாலை, ஜெயங்கொண்டத்தில் காலணி தொழிற்சாலை, கிருஷ்ணகிரியில் டெல்டா எலக்ட்ரானிக்ஸ் தொழிற்சாலை முதலான பல தொழிற்சாலைகள் திறக்கப்பட்டுள்ளன. மேலும், பல தொழிற்சாலைகள் தொடர்ந்து திறக்கப்பட உள்ளன. இலட்சக்கணக்கான இளைஞர்கள் வேலைவாய்ப்புகள் பெற்று வருகின்றனர். இவற்றின் காரணமாக தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு இந்தியாவில் முன்னணி மாநிலமாகச் சிறந்து விளங்குகிறது.

“எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்”

– என அய்யன் திருவள்ளுவர் கூறியதற்கு ஏற்ப, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தாம் எண்ணியபடி, தமிழ்நாடு 2030இல் 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதார மாநிலமாக தமிழ்நாட்டை உயர்த்திக் காட்டுவார் என்பது திண்ணம்! திண்ணம்!

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

## மகாராட்டிரம், அரியானா, கருநாடகம், பீகார் என

# மாநிலக் கட்சிகளை உருக்குலைக்கும் பி.ஜே.பி.! அ.தி.மு.க. விழித்துக் கொள்ளுமா?

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!



சென்னை,மார்ச்.9–

மகாராட்டிரம், அரியானா, கருநாடகம், வடகிழக்கு மாகாணங்களில் நயவஞ்சகமாக பி.ஜே.பி. ஊடுருவி, கூட்டணி வைத்த கட்சிகளை உருத் தெரியாமல் அழித்து, இப்பொழுது பீகாரிலும் தன் வேலையைக் காட்டிவிட்டது! இதற்குப் பிறகும் அ.தி.மு.க. விழித்துக் கொள்ளாவிட்டால், ‘கரடியைக் கம்பளி மூட்டை’ என்று கட்டிப் பிடித்த கதைதான் என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி விடுத்துள்ள எச்சரிக்கை அறிக்கை வருமாறு::

பாரதிய ஜனதா கட்சி என்பது கூடாரத்தில் நுழைந்த ஒட்டகம் போன்றது. ஒரு மாநிலத்தில் தனக்குப் பெரும்பான்மை இல்லாதபோது, அந்த மாநிலத்தில் உள்ள முக்கியமான கட்சியுடன் கூட்டணி வைத்துக் கொள்ளும்!

**பி.ஜே.பி.யின் நயவஞ்சக அணுகுமுறை!**

அந்த முக்கியமான கூட்டணிக் கட்சிக்காரரையே முதலமைச்சர் என்று ஒப்புக் கொள்ளும்; அதற்கு அடுத்த கட்டமாகக் கூட்டணியை உடைத்து, அந்தக் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களைத் தன் கட்சிக்குள் இழுத்துக் கொள்ளும். அதன் பிறகு, அந்தக் கூட்டணிக் கட்சியையே ஒழித்துக் கட்டி அல்லது பலகீனப்படுத்தி, பி.ஜே.பி.யே அம்மாநிலத்தில் முதன்மையான கட்சி என்ற நிலையை ஏற்படுத்திக் கொண்டுவிடும். எடுத்துக்காட்டாக மகாராட்டிராவை எடுத்துக் கொள்ளலாம்.

**மகாராட்டிரத்தில் என்ன நடந்தது?**

2019 ஆம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலில் பி.ஜே.பி.யும், (தேவேந்திர பட்னாவிஸ்) சிவசேனாவும் (உத்தவ் தாக்கரே) ஆகிய இரு கட்சிகளும் கூட்டணி வைத்துப் போட்டியிட்டன. பி.ஜே.பி. 105 இடங்களிலும், சிவசேனா 56 இடங்களிலும் வெற்றி பெற்றன.

யார் முதலமைச்சர்? என்பதில் அவர்களுக்கிடையே பிரச்சினை ஏற்பட்டதால், குடியரசுத் தலைவர் ஆட்சி செயல் பாட்டுக்கு வந்தது.

திடீரென்று ஒரு திருப்பம் – அது என்னவென்றால், தேசியவாத காங்கிரஸ் (NCP), சரத்பவாரின் தம்பி மகன் அஜித்பவார், அந்தக் கட்சியிலிருந்து விலகி, பி.ஜே.பி.க்கு ஆதரவு அளித்தார் என்பதுதான் அந்தச் செய்தி!

ஒரு விடியற்காலையில் தேவேந்திர பட்னாவிஸ் (பி.ஜே.பி.) முதலமைச்சராகவும், அஜித்பவார் துணை முதலமைச்சராகவும் பதவியேற்றுக் கொண்டனர்! (பி.ஜே.பி. நினைத்தால் ஆளுநர் விடியற்காலையில் 4 மணிக்குக்கூட பதவிப் பிரமாணம் செய்து வைப்பார்).

ஆனாலும், இந்தக் கூட்டணி ஆட்சி 80 மணிநேரம்தான் தாக்குப் பிடித்தது. பெரும்பான்மையை நிரூபிக்க முடியாததால், பதவி விலக நேர்ந்தது!

அதனைத் தொடர்ந்து, திரைப்படத்தில் நடப்பதுபோல ஒரு புதிய திருப்பம்! மகாராட்டிர மாநிலத்தில் முன்னணிக் கட்சியான சிவசேனா என்ன செய்தது? காங்கிரஸ் மற்றும் தேசியவாத காங்கிரஸ் ஆகியவற்றுடன் கூட்டுச் சேர்ந்தது. (மகாவியாஸ் அகாடி) உத்தவ்தாக்கரே (சிவசேனா) முதலமைச்சரானார்.

சிவசேனா இரண்டாக உடைந்தது. ஏக்நாத் ஷிண்டே தலைமையில் அந்தப் பிளவு ஏற்பட்டது – பின்னணியில் இருந்தது பி.ஜே.பி. உத்தவ் தாக்கரே தலைமையிலான கூட்டணி ஆட்சி 2 ஆண்டுகள் 214 நாள்கள் வரை நீடித்தது.

அடுத்து 2024 ஆம் ஆண்டில் நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தலில், பி.ஜே.பி. தலைமையிலான ‘மகாவியாஸ்’ கூட்டணி வெற்றி பெற்றது. மொத்தம் உள்ள 288 இடங்களில், இந்தக் கூட்டணிக்கு 235 இடங்கள் கிடைத்தன. (பி.ஜே.பி. 132, ஏக்நாத் ஷிண்டேயின் தலைமையிலான சிவசேனாவுக்கு 57, அஜித்பவார் தலைமையிலான தேசியவாத காங்கிரசுக்கு 41).

பி.ஜே.பி.யைச் சேர்ந்த தேவேந்திர பட்னாவிஸ் (பார்ப்பனர்) முதலமைச்சராகவும், சிவசேனாவைச் சேர்ந்த ஏக்நாத் ஷிண்டே, அஜித்பவார் ஆகிய இருவரும் துணை முதல மைச்சராகவும் பதவியேற்றனர். மகாராட்டிராவில் காலடி பதித்த பி.ஜே.பி., சிவசேனாவையும், தேசியவாத காங்கிரசையும் உடைத்து, ஆட்சியைக் கைப்பற்றியது என்பது கவனிக்கத்தக்கதாகும்.

**அரியானாவில் பி.ஜே.பி.யின் திருவிளையாடல்!**

அரியானாவில் என்ன நடந்தது?

90 உறுப்பினர்களைக் கொண்ட அரியானா சட்டப்பேரவைக்கு, 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் பி.ஜே.பி.,க்குக் கிடைத்த இடங்கள் 40; காங்கிரசுக்கு 31 இடங்கள்; ஜன்நாயக் ஜனதா கட்சி (JJP) 10 இடங்கள். யாருக்கும் பெரும்பான்மை இல்லை.

இந்த நிலையில், ஜே.அய்.பி. கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து பி.ஜே.பி. ஆட்சியை அமைத்தது. முதலமைச்சராக பி.ஜே.பி.யும், துணை முதலமைச்சராக ஜே.அய்.பி.யும் பொறுப்பேற்றன.

ஆனாலும், 2024 சட்டப்பேரவைத் தேர்தலுக்குமுன், இந்தக் கூட்டணி உடைந்தது (12.3.2024). முக்கியமாக மக்களவைத் தேர்தலில் ஜே.அய்.பி.க்கு இடங்கள் அளிப்பதில் ஏற்பட்ட சர்ச்சையால் இந்தக் கூட்டணி முறிந்தது.

2024, ஆகஸ்டு 16 அன்று நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தலில் பி.ஜே.பி. 48 இடங்களில் வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்தது.

இதில் கவனிக்கத்தக்கது என்னவென்றால், 2019 சட்டமன்றத் தேர்தலில் பி.ஜே.பி. ஆட்சியில் அமர ஆதரவு கொடுத்த ஜே.அய்.பி. கட்சிக்கு இந்தத் தேர்தலில் கிடைத்த இடங்கள் வெறும் பூஜ்யமே!

ஒட்டகம் கூடாரத்தில் நுழைந்த கதை என்பது இதுதான்!

**கருநாடகத்தில் நடந்த கதை!**

2006 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில், கருநாடக மாநிலத்தில் என்ன நடந்தது?

அம்மாநிலத்தில் குமாரசாமி தலைமையிலான மதச்சார்பற்ற ஜனதாதளத்துடன் கூட்டணி வைத்து பி.ஜே.பி. உள்ளே நுழைந்தது. 20 மாதங்கள் குமாரசாமி முதலமைச்சர், 20 மாதங்கள் எடியூரப்பா முதலமைச்சர் என்ற ஒப்பந்தப்படி, குமாரசாமி முதல மைச்சரானார். 20 மாதங்கள் முடிந்த பிறகு, இரு கட்சிகளுக்குள்ளும் பிரச்சினை வெடித்து, கூட்டணி முறிந்தது! பிறகு என்ன நடந்தது?

“ஆபரேஷன் தாமரை”மூலம் காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்களைப் பதவி ஆசை காட்டி, பி.ஜே.பி.,க்குள் இழுத்து, எடியூரப்பா தலைமையில் ஆட்சி அமைக்கப் பட்டது.

**வடகிழக்கு மாநிலங்களில் பி.ஜே.பி. என்ன செய்தது?**

அசாம் மற்றும் மணிப்பூர் போன்ற மாநிலங்களில் ஆரம்பத்தில் மாநிலக் கட்சிகளுடன் கூட்டணி வைத்த பி.ஜே.பி., மெல்ல மெல்ல அந்தக் கட்சிகளின் முக்கியத் தலைவர்களை – அவர்களின் ஊழல் குற்றச்சாட்டு களை வைத்து மிரட்டி, அசாமில் ஹிமந்தா பிஸ்வா சர்மா போன்றவர்களை இழுத்து ஆட்சியைத் தன்வசப்படுத்தியது.

பாஜக பல மாநிலங்களில் கூட்டணி கட்சித் தலைவர்களுக்குப் பதவி கொடுத்து, பிறகு அந்தத் தலைவர்களின் செல்வாக்கைச் சரித்து அல்லது அவர்களைத் தன் கட்சியில் இழுப்பது அல்லது அரசியலில் இருந்தே விரட்டுவது என்ற யுக்தியைக் கையாண்டு வருகிறது.

மகாராட்டிராவில் சிவசேனா கட்சியை உடைத்துவந்த ஏக்நாத் ஷிண்டே, மேற்குவங்கத்தில் மம்தாவை எதிர்த்துக் கட்சியைவிட்டு வெளியே வந்த சுமந்து அதிகாரி போன்றோரை, அவர்களால் பலன் அடைந்த பிறகு, அவர்களைத் துடைத்துப் போடும் காகிதம் போல பாஜக தூக்கி வீசி எறிந்தது! ஒரு காலத்தில் மாநிலத்தில் முக்கிய அரசியல் முகமாக மாநிலக் கட்சியின் முதன்மை முகமாக இருந்த அவர்கள், பா.ஜ.க.வோடு கூட்டுச் சேர்ந்ததால் அரசியல் எதிர்காலம் இல்லாமல் கரைந்து போய்விட்டார்கள்.

**இப்பொழுது பீகாரில் அரங்கேற்றம்!**

பீகாரில் உள்ளே நுழைய – அம்மாநிலத்தில் அறிமுகமான நிதிஷ்குமாரைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று நினைத்து, அந்தத் திசையில் காயை நகர்த்தியது பி.ஜே.பி.நிதிஷ்குமார் கடந்த 20 ஆண்டுகளாக பீகாரில் முதலமைச்சராக இருந்தவர்.

2025 நவம்பர் 20 ஆம் தேதி முதலமைச்சர் பதவியேற்ற ஜனதா தள் (United) தலைவர் நிதிஷ்குமார், நான்கே மாதங்கள்கூட ஆகாத நிலையில், இப்போது முதலமைச்சர் பதவியிலிருந்து விலகவேண்டிய அவசியம் என்ன?

நிதிஷ்குமார் நீண்ட காலமாக தேசிய அரசியலில் பணியாற்றவேண்டும் என்று விருப்பம் வைத்திருந்தாராம்! அதனால், மாநிலங்களவைக்கு அனுப்புவது சரியான தருணம் இதுவே! அவர் மாநில அரசியலில் இல்லாவிட்டாலும், தேசிய அளவில் ஆலோசனை வழங்கும் மூத்த தலைவராக இருக்கப் போகிறாராம்! – பி.ஜே.பி. வட்டாரம் கூறுகிறது. நரியை நனையாமல் குளிப்பாட்டுவது என்பார்களே, அது இதுதான்!

ஏற்கெனவே நிதிஷ்குமார் ரயில்வே துறை அமைச்சராக இருந்தவர்தானே!

தேசிய அரசியலில் ஏற்கெனவே இருந்தார் என்பதற்கு இது ஒன்று போதாதா? ஏதோ இப்பொழுதுதான் தேசிய அரசியலில் நிதிஷ்குமார் நுழையப் போவதாக பி.ஜே.பி. கதை கட்டுகிறது என்பதெல்லாம் வழக்கமான பி.ஜே.பி. நடத்தும் நயவஞ்சக நாடக அரசியல்தான்!

நிதிஷ்குமாரை பீகார் அரசியலிலிருந்து நகர்த்திவிட்டு, பி.ஜே.பி. ஆட்சியைப் பீகாரில் பகிரங்கமாகப் பிரகடனப்படுத்தும் ஏற்பாடுதான் இது! வழக்கம்போல நிதிஷ்குமார் மகனுக்குத் துணை முதலமைச்சர் பதவி!

மகாராட்டிரம், அரியானா, கருநாடகா, வடகிழக்கு மாநிலங்களில் பி.ஜே.பி. கையாண்ட சித்து விளையாட்டின் – ஊடுருவி ஒழிக்கும், கபளீகரம் செய்யும் வஞ்சகக் கலையின் தொடர்ச்சிதான் பீகார் மாநில அரசியலில் இப்பொழுது நடத்தியுள்ள நயவஞ்சகம்!

(5.3.2026) அன்று கூட அசாம் காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் மூன்று பேர், பி.ஜே.பி.,க்குள் இழுக்கப் பட்டுள்ளனர்.

**மதவாத பி.ஜே.பி.,க்குக் கைவந்த கலை!**

பி.ஜே.பி.யின் இந்த அரசியல் கபட வேடத்தைத் தொடக்கக் காலம் முதலே தோலுரித்து வந்துள்ளது திராவிடர் கழகம் – பொதுவாக பெரியார் மண்ணான இந்தத் திராவிட மண் இதனைச் சரியாகவே புரிந்து வைத்தும் உள்ளது. அதனால்தான், பி.ஜே.பி.யின் ஆட்ட பாட்டங்கள் இங்கே பலிக்கவில்லை!

தமிழ்நாட்டில் கால் பதிக்க அ.தி.மு.க.வைப் பயன்படுத்தும் திட்டத்தில் இறங்கியிருக்கிறது என்பதை இப்பொழுதும்கூட எச்சரிக்கின்றோம்!

எதற்கெடுத்தாலும் டில்லிக்கு ஓடும் ஒரு நிலையை அ.தி.மு.க. வுக்கு ஏற்படுத்திவிட்டது பி.ஜே.பி.! ‘திருதராஷ்டிர ஆலிங்கனம்’ என்பது எல்லாம் மதவாத பி.ஜே.பி.க்குக் கைவந்த கலை!

‘கம்பளி மூட்டை’ என்று கரடியைக் கட்டிப் பிடித்தால் ‘உயிருக்கே உலை’ என்று முன்பும் எச்சரித்தோம், இப்போதும் எச்சரிக்கின்றோம்!

அக்கட்சித் தொண்டர்களே, ‘கட்டிப் பிடித்தவர்களை’ இப்போதாவது உணருங்கள்!

அந்தோ பரிதாப அ.தி.மு.க.!

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



தருமபுரி கிழக்கு மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் இனமான பேராசிரியர் பெருந்தகை அவர்களின் 6 ஆம் ஆண்டு நினைவுநாளில் அவரது திருவுருவ படத்திற்கு தருமபுரி கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் ஆ.மணி எம்.பி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் நகர செயலாளர்கள் நாட்டான். மாது, எம்.பி.கௌதம் மற்றும் வே.தங்கமணி, டி.எல்.காவேரி, ஏ.எஸ்.சண்முகம், முல்லை வேந்தன், சுருளிராஜன், ஜெகன், ரஹிம், அசோக்குமார், ஹரிவிக்னேஷ் உள்ளிட்ட கழகத்தினர் உள்ளனர்.